**13.12.2023.** CC. 232/2013 PW.1 Tmt. Leema Rose

**கடந்த 05.04.2019ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருக்கும் நிலையில் இந்நீதிமன்ற Crl.M.P. No. 6633/2023, dated 22.11.2023ன் படி கு.வி.மு.ச 1973 பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

2. புகார் மனுவை நான் என் கைப்படி எழுதி கொடுத்தேன். மேற்படி கையெழுத்திற்கும் அ.சா.ஆ 1ல் உள்ள எழுத்துக்களுக்கும் வேறுபாடுகள் உள்ளது என்றால் நான் தான் எழுதினேன் அதில் வேறுபாடு உள்ளது சம்பவம் நடந்த மறுதினம் போலீசார் எழுதி கையெழுத்து வாங்கி கொண்டார்கள். என் அம்மாவிடம் எந்தவித புகாரும் வாங்க வில்லை. நான் சம்பவத்திற்கு பிறகு நாங்கள் நேராக நிலையம் வந்தோமா என்றால் ஆஸ்பத்திரிக்கு போனோம் அவர்கள் நிலையம் போக சொன்னார்கள் நாங்கள் சென்றோம்.

2. மேற்படி சம்பவத்திற்கு முன்பிருந்தே எதிரிக்கும் எங்களுக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். சம்பவமானது இருட்டுகின்ற நேரம் என்றால் சரிதான். என் அம்மாவிற்கு அப்போது 60 வயதிருக்கும். சம்பவ இடத்திற்கும் கருங்கலிற்கும் 5,6 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு அருகில் ஷாம், பாபு ஆகியோர் வீடு உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

3. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் என் அம்மா இருட்டு நேரத்தில் கீழே விழுந்து அதில் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. யாருமே அந்த இடத்தில இல்ல, எங்க அம்மாவ இவர் தான் சவட்டினார் நான் பார்த்தேன். எங்களுக்கிடையே இருந்த சொத்துபிரச்சனையை வைத்து இவ்வழக்கில் நாங்கள் ஆதாயம் தேடினோம் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.